**செய்தி வெளியீடு – 28.6.2008**

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கிடங்குகளில் சிமெண்ட் தங்குதடையின்றி விற்பனை செய்யப்படுகிறது**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணைப்படி, இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் எடுக்காத நடவடிக்கையாக சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்தும்நோக்கில் தமிழகத்தில் உள்ள சிமெண்ட் ஆலைகளிலிருந்து சிமெண்ட் மூட்டைகள் தருவிக்கப்பட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான 210 தாலுகா கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டு, அரசு நிர்ணயித்துள்ள அடக்க விலையான மூட்டை ஒன்று 200 ரூபாய் விலையில் 21.1.2008 முதல் தேவைப்படும் பொதுமக்களுக்கு நேரடியாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின்படி, 2008 ஜனவரி மாதத்தில் 1,953 மெட்ரிக் டன் சிமெண்டும், பிப்ரவரியில் 20 ஆயிரத்து 569 மெட்ரிக் டன், மார்ச்சு மாதத்தில் 25 ஆயிரத்து 964 மெட்ரிக் டன், ஏப்ரல் மாதத்தில் 33 ஆயிரத்து 727 மெட்ரிக் டன், மே மாதத்தில் 37 ஆயிரத்து 119 மெட்ரிக் டன், ஜூன் மாதம் 26 ஆம் தேதி வரை 35 ஆயிரத்து 8 மெட்ரிக் டன் என மொத்தம் இதுவரை ஒரு இலட்சத்து 54 ஆயிரத்து 340 மெட்ரிக் டன் சிமெண்ட் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் கிடங்குகள் மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மாதத்திற்கு மாதம் விற்பனை செய்யப்படும் சிமெண்டின் அளவு அதிகரித்துள்ளதை இதன்மூலம் அறிந்து கொள்ள முடியும்.

26.6.2008 அன்றைய நிலவரப்படி கிடங்குகளில் 8 ஆயிரத்து 371 மெட்ரிக் டன் உள்நாட்டு சிமெண்டு கையிருப்பு உள்ளது. கிடங்குகளில் சிமெண்ட் இருப்பு குறைவாக இருக்கும்பட்சத்தில் அந்தந்த மண்டல மேலாளர்கள் சிமெண்ட் உற்பத்தியாளர்களிடம் தேவையான சிமெண்டினை உடனுக்குடன் பெற்று இருப்பு வைத்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

எந்த ஒரு கிடங்கிலும், பொதுமக்களுக்கு உள்நாட்டு சிமெண்ட் வழங்கப்படுவதில் எவ்விதப் பிரச்சினையும் இல்லை. மேலும் பொதுமக்கள் நலன் கருதி சிமெண்ட் விற்பனையை அதிகரிக்க எவ்வித ஆவணமும் இன்றி வீட்டுப் பராமரிப்புப் பணிகளுக்காக 50 மூட்டை சிமெண்ட்; மற்றும் புதிய வீடு கட்ட 100 மூட்டை வரை சிமெண்ட் தேவைப்படுவோருக்கு அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடத்திற்குப் பதிலாக குடும்ப அட்டையின் அடிப்படையில் சிமெண்ட் வழங்கப்படவும் உள்ளது.

இந்நிலையில், இன்றைய நாளேடு ஒன்றில் சிமெண்ட் விற்பனை நிறுத்தம் என செய்தி வெளியிடப்பட்டுள்ளது உண்மைக்கு மாறானதாகும்.

***